

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (20.09.2024) தேனாம்பேட்டை மண்டலம், வார்டு–120, திருவல்லிக்கேணி, நடுக்குப்பம் பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கைப்பந்து விளையாட்டுத் திடல் மற்றும் உள்விளையாட்டு அரங்கத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சைல்ட்லைஃப் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் திருமதி சாந்தி ராஜசேகரன், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் (எ) தனசேகரன், மாமன்ற உறுப்பினர் திருமதி ரா.மங்கை ராஜ்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.09.2024), தேனாம்பேட்டை மண்டலம், வார்டு–120, திருவல்லிக்கேணி, நடுக்குப்பம் பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கைப்பந்து விளையாட்டு மற்றும் உள்விளையாட்டு அரங்கத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சைல்ட்லைஃப் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் திருமதி சாந்தி ராஜசேகரன், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் (எ) தனசேகரன், மாமன்ற உறுப்பினர் திருமதி ரா.மங்கை ராஜ்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



அய்யம்பாளையம் மருதாநதி அணைக்கட்டு மேல்பகுதியான ஏ.கே.ஜி. நகருக்கு வந்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு கிராம மக்கள் ஆரத்தி எடுத்து மாலை அணிவித்து உற்சாக வரவேற்பு அளித்தனர். ரூ.1கோடியே 28லட்சம் மதிப்பில் தங்கள் கிராமத்திற்கு சாலை வசதி செய்து கொடுத்ததற்கு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு கிராம மக்கள் பாராட்டு தெரிவித்தனர். அருகில் திண்டுக்கல் எம்.பி.ஆர்.சச்சிதானந்தம், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், துணைத்தலைவர் ஹேமலதா மணிகண்டன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், முருகேசன் உட்பட பலர் உள்ளனர்.



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியில் பொது உறுப்பினர் கூட்டம் மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தலைமையில் திருச்செந்தூர் KTM திருமண மண்டபத்தில் பரிசுப் பொருட்கள் வழங்கி சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டேவிட் செல்வின், மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், திருச்செந்தூர் ஒன்றிய செயலாளர் APR செங்குழி ரமேஷ், திருச்செந்தூர் நகர் மன்ற தலைவர் திருமதி சிவ ஆனந்தி, நகரச் செயலாளர் வாள் சுடலை, கழக பேச்சாளர் சரத்பாலா,14 வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் ரேவதி கோமதிநாயகம்,16 வந்து வார்டு உறுப்பினர் ஆனந்த், மணல்மேடு சுதாகர், மணிகண்டன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (20.09.2024) தேனாம்பேட்டை மண்டலம், வார்டு–120, திருவல்லிக்கேணி, நடுக்குப்பம் பகுதியில் புனரமைத்து மேம்படுத்தப்பட்ட மீன் அங்காடியினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் (எ) தனசேகரன், மாமன்ற உறுப்பினர் திருமதி ரா.மங்கை ராஜ்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (20.09.2024) தேனாம்பேட்டை மண்டலம், வார்டு–120, திருவல்லிக்கேணி, நடுக்குப்பம் பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கைப்பந்து விளையாட்டு மைதானம் மற்றும் உள்விளையாட்டு அரங்கத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சைல்ட்லைஃப் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் திருமதி சாந்தி ராஜசேகரன், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் (எ) தனசேகரன், மாமன்ற உறுப்பினர் திருமதி ரா.மங்கை ராஜ்குமார், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் உள்ள காவல் நிலையங்களிலேயே பெண்களுக்குப் பாதுகாப்பில்லை!

## காங்கிரஸ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, செப். 22 - பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் உள்ள காவல்நிலையங்களிலேயே பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என காங்கிரஸ் குற்றம்சாட்டியுள்ளது.

இது குறித்து டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் சுப்ரியா ஸ்ரீனாடே, ஒடிசா மாநிலத்தில் உள்ள காவல்நிலையத்தில் பெண் ஒருவர் உதவி கேட்டு சென்ற நிலையில் ராணுவ உயரதிகாரி பாலியல் வன்கொடுமை செய்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒடிசாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரதமர் மோடி, பெண்களின் முன்னேற்றம் குறித்து பேசிய 72 மணி நேரத்தில், காவல்நிலையத்தில் இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளதாகவும், இது குறித்து பா.ஜ.க. தலைவர்கள் ஒருவர் கூட கண்டனம் தெரிவிக்கவில்லை என புகார் கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண், ஒரு வழக்கறிஞர் என்றும், ராணுவ அதிகாரி ஒருவருடன் திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளதாகவும், உதவி கேட்டு வந்த பெண்ணுக்கு இந்த நிலைமை என்றால் மற்ற பெண்களின் நிலை என்னவாக இருக்கும் என்றும் காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் சுப்ரியா ஸ்ரீனாடே கேள்வி எழுப்பியுள்ளார். பிரதமர் நரேந்திர மோடி ஒடிசா சம்பவத்தில் மவுனம் காப்பது ஏன் என்றும் சுப்ரியா வினவியுள்ளார்.

மேற்கு வங்க மாநிலத்தில் நிகழ்ந்த பாலியல் வன்கொடுமைக்கு எதிராக போராட்டம் நடத்திய பா.ஜ.க.வினர், ஒடிசா சம்பவத்தை புறக்கணிப்பது ஏன் என்றும் காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் சுப்ரியா ஸ்ரீனாடே கேள்வி எழுப்பியுள்ளார்.

## கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்,

# நாகர்கோவில் மாநகர தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!

நாகர்கோவில், செப். 22 - கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் (19.09.2024 - வியாழக்கிழமை) அன்று மாலை 5.00 மணிக்கு நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் தலைமையில் நாகர்கோவில், வாட்டர் டேங்க் ரோடு, இம்பீரியல் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்கள் பற்றியும், இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்க்கை தீவிரப் படுத்தவும், கழக வளர்ச்சிக்கான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

மாநில கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என்.தில்லை செல்வம், அயலக அணி இணைச் செயலாளர் வழக்கறிஞர் பி.புகழ்காந்தி, மாவட்ட அவைத் தலைவர் எப்.எம்.இராஜரெத்தினம், மாவட்டப் பொருளாளர் ஐ.கேட்சன், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம். மதியழகன், நாகர்கோவில் மாநகர அவைத் தலைவர் ப.பன்னீர் செல்வம், பகுதி செயலாளர்கள் இ.ஜவஹர், என்.பி.துரை, த. ஜீவா, மு.சேக் மீரான், நாகர்கோவில் மாநகர கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 6 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



மதுரை வடக்கு மாவட்டம் மற்றும் அலங்காநல்லூர் ஒன்றிய கழகத்தின் சார்பில் 15 பி மேட்டுப்பட்டியில் முன்னாள் அலங்காநல்லூர் ஒன்றிய கழக செயலாளர் ஆர்.கென்னடி என்ற கண்ணன் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் இரட்டை மாட்டு வண்டி எல்கை பந்தயத்தினை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் ஆ. வெங்கடேசன் எம்.எல்.ஏ., முன்னிலையில் கழக இரு வண்ணக் கொடியசைத்து துவக்கி வைத்த போது எடுத்தபடம். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.